# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1818 - 2013 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2013.07.05

*1818 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 918 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 920 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 925 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 919 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.–*** (i) *கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *பண்டகசாலை கருத்திட்டம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## மேல் நீதிமன்றம் - திருகோணமலை

*அரசுடைமையாக்கப்பட்ட வழக்குகளின் சான்றுப் பொருட்கள் கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்தல்*

கந்தளாய் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் மற்றும் மூதூர் மாவட்ட/நீதவான் நீதிமன்றங்களினால் அரசுடைமையாக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படும் வாகனங்களை கேள்வி கோரப்பட்டு விற்பனை செய்வதற்கு திருகோணமலை மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விற்பனைக்காக உள்ள வாகனங்கள் கீழே கூறப்பட்ட நீதிமன்றங்களில் 10.07.2013 ஆந் திகதிக்குப் பின்னர் நீதிமன்ற பதிவாளர் மூலம் பார்வையிடலாம். இவற்றிற்குரிய கேள்விப்படிவங்களை திருகோணமலை மேல் நீதிமன்ற கணக்காளரிடம் 15.07.2013 ஆந் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 30.07.2013 ஆந் திகதியுடன் கேள்வி கோரல் முடிவுறுத்தப்பட்டு 05.08.2013 ஆந் திகதி மு. ப. 12.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். இதற்காக மீளச் செலுத்தப்படாத ரூபா 100 ஐச் செலுத்த வேண்டும். அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்படிவம் தவிர்ந்த ஏனைய விண்ணப்பங்கள், புகைப்படப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்படும்.

ஒரு கேள்வி விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். எனினும் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவம் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனைய விபரங்கள், நிபந்தனைகள் விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும்.

வாகனம் தொடர்பான விபரங்களும் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகை போன்ற விபரங்களும் பின்வருமாறு :-

| இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் விபரம் | பார்வையிடக்கூடிய இடம் | மீளச்செலுத்தப்படக் கூடிய வைப்பு |
|---|---|---|---|---|
| 01 | எம்சீ 35902 | அசோக் லெய்லண்ட் வர்க்க டிப்பர்-சீபீஎல்எப் 3870 | நீதவான் நீதிமன்றம், கந்தளாய் | 10,000 |
| 02 | எம்சீ 36953 | மிற்சுபி வர்க்க வெள்ளை நிற லொறி-ஈபீஎல்எப்-2866 | நீதவான் நீதிமன்றம், கந்தளாய் | 7,500 |
| 03 | எம்சீ 37030 | டாடா டிமோ வர்க்க பட்டா லொறி-ஈபீபீபீ-2438 | நீதவான் நீதிமன்றம், கந்தளாய் | 7,500 |
| 04 | எம்சீ 3935/04 | மெர்சி பேகியூசன் வர்க்க ட்ரக்டர்-49-4643 | நீதவான் நீதிமன்றம், கந்தளாய் | 5,000 |
| 05 | எம்சீ 3935/04 | சாம்பல் நிற ட்ரக்டர் பெட்டி-46-7508 | நீதவான் நீதிமன்றம், கந்தளாய் | 1,000 |
| 06 | வழக்கு இலக்கம் இல்லை | இசுசு வர்க்க லொறி 27 ஸ்ரீ 4131 | நீதவான் நீதிமன்றம், கந்தளாய் | 1,000 |
| 07 | எம்சீ 14121/09 | முச்சக்கர வண்டி ஈபீஜேஎல் 8493 | நீதவான் நீதிமன்றம், மூதூர் | 1,000 |

அ. பிரேமசங்கர்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
தவிசாளர்.

மேல் நீதிமன்ற பெறுகைக் குழு,
மேல் நீதிமன்றம்,
திருகோணமலை,
2013.06.14.

7-02

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2014

2014, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2014, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 2 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2013.08.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ள கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்றுப்பத்திரத்துடன் முத்திரையிடப்பட்ட கடிதக் கூட்டினுள் கூட்டின் மேல் இடது மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2013.08.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2013.10.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் என பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2013.06.14.

### அட்டவணை

### பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2014

(2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதிவரை)

| தொடர் இல. | தவறணையின் பெயர் மற்றும் இலக்கம் | பிரிவு | தவறணை அமைக்க வேண்டிய பிரதேச செயலாளர் பிரிவு | தவறணையை திறக்க வேண்டிய நேரம் | தவறணையை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்பு | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் திகதியும் நேரமும் | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பதுளை 1 | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஐக் கொண்ட பிரிவில் ஹுணுகொட்டுவ எனும் பெயருடைய அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2013.08.07<br>பி. ப. 10.30 | வெற்றி கொள்ளும் கேள்விதாரர்கள் சமர்ப் கப்படாத விடத்து 2013.10.23 பி. ப. 10.30 மீண்டும் விற்பனை செய்யப் படும் |

7-26

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பழைய பெயர்* : லெமன் லெஷர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 74796
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 41-2/1, கோல்பேஸ் டெரஸ், கொழும்பு 03
*கம்பனியின் புதிய பெயர்* : த ஓஷன் கலம்பு (பீவீரீ) எல்ரீடீ

7-81

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : சிரிகாந்தி மெனுபக்சரர்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91553
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 2ஏ, இன்டஸ்ட்ரியல் எஸ்ட்டேட், இன்டஸ்ட்ரியல் டெவலொப்மென்ட் போர்ட், பனலுவ, வடரெக

*கம்பனியின் பெயர்* : கெயார் சிஸ்ரம்ஸ் சவுத் ஏஷியா (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91500
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 410/95, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7

*கம்பனியின் பெயர்* : றோவிக்டா லங்கா (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91430
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 55, பாரொன் பெரேரா மாவத்தை, புது வீதி, கொத்தடுவை

*கம்பனியின் பெயர்* : சமனலகஹவத்த (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 92311
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 16/ஏ, ஸ்ரீ மஹா விகார வீதி, தெஹிவளை

*கம்பனியின் பெயர்* : வயம்ப பிளைவுட் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 92265
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : அன்துகல, பொதுஹெர

*கம்பனியின் பெயர்* : யூ. எஸ். கொஸ்மொ லங்கா (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 92189
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 83-1/4, காலி வீதி, கொழும்பு 06

*கம்பனியின் பெயர்* : த பாம்ஸ் விலா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 92127
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 114, 6 டிங்ரீஸ் நோர்த், காலி வீதி, அம்பலாங்கொடை

*கம்பனியின் பெயர்* : ஸ்டார் புறொபர்டீஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91987
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 114, 6, டிங்ரீஸ் நோர்த், காலி வீதி, அம்பலாங்கொடை

*கம்பனியின் பெயர்* : ஸ்டூர்லெஸ்கேட் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91969
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 16/ஏ, ஸ்ரீ மஹா விகார வீதி, தெஹிவளை

*கம்பனியின் பெயர்* : வோல்கிரிப் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91905
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 9/1, கே. ஏ. வின்சன்ட் பெரேரா மாவத்தை, கொழும்பு 14

*கம்பனியின் பெயர்* : ஆர்.எச்.எம்.இம்போட்ஸ் அன்ட் எக்ஸ்போட்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 91906
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 99-18, என்டஸன் தெரு, குடாபாடுவ, நீர்கொழும்பு

*கம்பனியின் பெயர்* : இன்டிலெக்ஸ் கார்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 92471
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : "நவோதா", கரவிதகர, சிலாபம்

7-80

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : கெடிகதா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 93015
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 12.06.2013
*பதிவு முகவரி* : இல. 14, 59 ஆவது வீதி, மன்னிங் பிளேஸ், கொழும்பு 06

எல். எம். மெனேஜ்மென்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 291/32ஏ, ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 05

7-76

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மொரட்டுவை, மொரட்டுவெல்லை, புனித பீட்டர் வீதியில் உள்ள இல. 99 இல் வசித்து தற்போது ஐக்கிய இராச்சியத்தில், எஸ்ஸெக்ஸ் ஆர்எம்16-6ஏபீ, கிரேஷ், சப்போர்ட் ஹன்திரத், லென்னொக்ஷ் கிலோசில் உள்ள இல. 53 இல் வசிக்கும் பொன்னஹென்னதிகே பிரயன் நிரோஷன் டயஸ் (அ. அ. இல. 860352940V), குருகுலசூரிய பல்பட்டம்குட்டிகே ரீட்டா ஐராங்கனீ பர்னாந்து (அ. அ. இல. 565112260V) ஆகிய நாங்கள் மேற்கூறிய மொரட்டுவை, மொரட்டுவெல்லை, புனித பீட்டர் வீதியில் உள்ள இல. 99 இல் வசிக்கும் திஸாநாயகலாகே சம்பா கல்மினி பெரேரா அல்லது சம்பா நில்மினி பெரேரா (அ. அ. இல. 686483070ஏ) என்பவரை மொரட்டுவை பிரசித்த நொத்தாரிசு திருமதி எச். எஸ். பத்துபிரிய பீரிஸ் அவர்களால் 2008, மே மாதம் 11 ஆந் திகதி அத்தாட்சிசெய்த இல. 6800 என்ற அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்து விட்டதாகவும் செல்லுபடியற்றதாக்கி விட்டோம் எனவும் அறிவிக்கிறோம்.

மேலும் மேற்கூறிய தத்துவக்காரரால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கும் சம்பந்தங்களுக்கும் நாம் பொறுப்புகொள்ள மாட்டோம் என இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கிறோம்.

(1) பொன்னஹென்னதிகே பிரயன் நிரோஷன் டயஸ்,
(2) குருகுலசூரிய பல்பட்டம்குட்டிகே ரீட்டா ஐராங்கனீ பர்னாந்து.

7-77

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொயகனே, டாம்பொக்க, கொழும்பு வீதியில் இலக்கம் 313 என்ற முகவரியில் வசிக்கும் அன்தனி ஸ்டான்லி ஜூட் என்பவர் அறிவித்துக்கொள்வதாவது,-

கேகாலை, பிரதான வீதி, இலக்கம் 197 இல் வசிக்கும் சாஹுல் ஹமீட் முஹம்மட் அமீன் என்பவருக்கு பகிரங்க நொத்தாரிசாகிய எம். எஸ். எம். தம்சீல் என்பவரால் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட 8232 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தை 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி முதல் இரத்துச்செய்து செல்லுபடியாகாதபடி செயலிழக்கச் செய்துள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

அன்தனி ஸ்டான்லி ஜூட்.

7-66

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அமெரிக்காவின் மேரிலாண்ட் 20832 ஒல்னே, சிங்கர்ஸ் கிளேன் டிரைவ், இலக்கம் 3529 இல் (இல. 3529 சிங்கர்ஸ் க்ளென் ட்ரைவ், ஒல்னே, மேரிலாண்ட் 20832, யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஒப் அமெரிக்கா) வசிக்கும் சுசித்த ஹேமகுமார டீ சில்வா ஜயரத்ன ஆகிய நான், தொமித்த கே. வொலஸ் பிரசித்த நொத்தாரிசு, கொலம்பியா அவர்களால் 13 ஆந் திகதி யூன் 2005 இல் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஹோமாகம, ஹலவிலவத்த, இலக்கம் 9/4, சமன் மாவத்தையைச் சேர்ந்த உறல ஷீலா ஹேமஜீனா டீ சில்வா வைத்தியநாத அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட சகல அற்றோணித் தத்துவ உரிமைகளையும் இரத்துச் செய்வதாக சம்பந்தப்பட்ட சகலருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

இந்த அற்றோணித் தத்துவம் 2005.07.27 ஆந் திகதிய 305/133 ஆம் இலக்கத் தாளில், 10337 ஆம் இலக்க தினப்புத்தகத்தின்கீழ் பதிவுசெய் யப்பட்டுள்ளது.

சுசித்த ஹேமகுமார டீ சில்வா ஜயரத்ன.

7-170

---

## வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனியின் கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தலானது :-

கம்பனியின் பெயர் : ஏஈஎல் போர்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 92765
கூட்டிணைப்புத் திகதி : 2013, மே 29
கம்பனியின் அலுவலக பதிவு முகவரி : அக்செஸ் டவர்ஸ், 8 ஆம் மாடி, இல. 278, யூனியன் இடம், கொழும்பு 02

பீ. டபிள்யூ. கோர்ப்பரேட் செக்ரடேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-49

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பிரமிட் வில்மார் ப்ளான்டேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92772
கூட்டிணைப்புத் திகதி : 2013, மே 29
பதிவு முகவரி : இல. 4, 2/1, லொறிஸ் வீதி, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி செயலாளர்கள்.

7-12

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த ஹொலிடே ப்ளேன் ஓவர்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 78904
கூட்டிணைப்புத் திகதி : 2011.05.09
பதிவு முகவரி : இல. 301ஏ, காலி வீதி, கொழும்பு 03

கம்பனி செயலாளர்.

7-11

---

## பொது அறிவித்தல்

கம்பனி பதிவு இலக்கம் பீபி 1660 என்ற இலக்கமுடையதும் கொழும்பு 10, ஆர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள கெல்சே ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் என்ற கம்பனியினதும் கம்பனி பதிவு இலக்கம் பீகியூ 69 என்ற இலக்கமுடையதும் கொழும்பு 3, டீல் இடம் 2 ஆம் இலக்கத்திலுள்ள டுனாமிஸ் கெப்பிட்டல் பீஎல்சீ என்ற கம்பனியுடன் 2013, மாச்சு 27 ஆந் திகதி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 242(1) ஆம் பிரிவிற்கிணங்க ஒன்றிணைப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் பிரகாரம் நாம் இத்தால் அறிவிக்கின்றோம்.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி டுனாமிஸ் கெப்பிட்டல் பீஎல்சீ ஆகும்.

கேஎச்எல் கோர்ப்பரேட் சேர்விசெஸ் லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

7-31

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படுவதற்கான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ஸ்கோப் லங்கா கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 92053
பதிவுத் திகதி : 2013, ஏப்பிறல் 11
பதிவு முகவரி : லெவல் 03, இல. 285, ஆர். ஏ. டீ மெல் மாவத்தை, கொழும்பு 03

கம்பனி செயலாளர்கள்.

7-45

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : என். கே. செக்ரடேரியல் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92827
கூட்டிணைப்புத் திகதி : 2013, யூன் 3
பதிவு முகவரி : இல. 90, 2 ஆவது மாடி, அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கக் கட்டிடம், சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02

என். கே. செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

7-05

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த சென்சுரி புடிக் பங்களோ கெண்டி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இல. : பீவீ 92762
பதிவு முகவரி : இல. 45, பிரேபுறூக் வீதி, கொழும்பு 02
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 29.05.2013

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

7-06

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் நாம் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம் :-

கம்பனியின் முன்னைய பெயர் : கொபெல்ஸ்டொன் (பீவீரீ)
கம்பனி இலக்கம் : பீவீ 79737
பதிவு முகவரி : இல. 2 டீல் இடம், கொழும்பு 03

*கம்பனியின் புதிய பெயர்* : பர்ஸ்ட் கெபிட்டல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

கேஎச்எல் கோர்ப்பரேட் சேர்விசெஸ்
லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

7-32

---

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் ஒருங்கிணைப்புக்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஸ்ரீ ராம் ஓட்டோ மொபைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 92611
*பதிவுத் திகதி* : 2013, மே 20
*பதிவு முகவரி* : இல. 18, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14

அறவாண்டியாபிள்ளை கதிரேசன்,
பணிப்பாளர்.

7-07

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எம்ஜேஎஃப் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீவீ 79545
*பதிவு முகவரி* : இல. 111, நீர்கொழும்பு வீதி, பேலியாகொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 21.06.2011

எஸ்பீஏ கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

7-89

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : டெஸ்கோ ஒபீஸ் ஒடோமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92709
*கூட்டிணைப்புத் திகதி* : 27.05.2013
*பதிவு முகவரி* : இல. 40/1/ஏ, புதிய கண்டி வீதி, கெமுனு வீதி, கொத்தலாவல, கடுவல

கம்பனி செயலாளர்.

7-98

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : ஒரெல் மெனுபக்ச்சரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : ஒரெல் கோப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீவீ 72125
*பதிவு முகவரி* : இல. 49, ஸ்ரீ ஜினரத்தன வீதி, கொழும்பு 2
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 01.03.2013

எஸ்பீஏ கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

7-88

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பெடிஸீன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 89570
*கூட்டிணைப்புதி திகதி* : 26.11.2012
*பதிவு முகவரி* : இல. 16, சட்டத்தரணிகள் அலுவலக கட்டிடத் தொகுதி, கோட்டை, மாத்தறை

ஐ. எஸ். என். கொத்தகொட,
பணிப்பாளர்.

7-99

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எல். ஓ. எல். சீ. லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92639
பதிவு முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

சீ. எஸ். இமானுவெல்,
கம்பனி செயலாளர்.

31, மே 2013.

7-142

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 20.05.2013 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எல்ரீ புரொடக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 92608
பதிவு முகவரி : இல. 7, 28 ஆம் ஒழுங்கை, இன்னர் ஃபிளவர் றோட், கொழும்பு 03

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

7-140

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டச் எம் 2 கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 93050
திகதி : 14.06.2013
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 172, ஹல்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு 12

சீ. மத்தீவ் அன்ட் கம்பனி
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்-எச்ஈசீ/(2) 2013/311.

7-130

---

## வரையறுக்கப்பட்ட பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் முன்னைய பெயர் : லெகொ மீற்றரிங் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனி இலக்கம் : பீவீ 63270
பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : இல. 411, காலி வீதி, ஈ. எச். குரே கட்டிடம், கொழும்பு 03
கம்பனியின் புதிய பெயர் : அன்ரி லெகொ மீற்றரிங் கம்பனி (பீவீரீ) எல்ரீடீ
பெயர் மாற்றப்பட்ட திகதி : 2008.07.21

அன்ரி லெகொ மீற்றரிங் கம்பனி (பீவீரீ) எல்ரீடீ என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோர்ப்பரேட்
செக்ரட்டேரியல் (பிரிவு) எல்ரீடீ,
கம்பனி செயலாளர்கள்.

2013.06.20.

7-165/1

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : லெகொ மீற்றரிங் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனி இலக்கம் : பீவீ 63270
கூட்டிணைப்புத் திகதி : 2008.03.03
கம்பனியின் பதிவு முகவரி : இல. 411, காலி வீதி, ஈ. எச். குரே கட்டிடம், கொழும்பு 03

லெகொ மீற்றரிங் (பீவீரீ) எல்ரீடீ என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோர்ப்பரேட்
செக்ரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடீ,
கம்பனி செயலாளர்கள்.

2013.06.20.

7-165/2

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : ஜீ எச் சந்தன குரூப் (பிறைவேட்) லிமிடெட்
பதிவிலக்கம் : பீவீ 92803
கூட்டிணைப்புத் திகதி : 31.05.2013
பதிவு முகவரி : இல. 197, காலி வீதி, இரத்மலானை

பணிப்பாளர்.

7-149

---

**அறிவித்தல்**

வரையறுக்கப்பட்ட ஸ்கை டெலிவிஷன் மற்றும் ரேடியோ நெட்வேர்க்ஸ் (தனியார்) நிறுவனம் மற்றும் டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் ஒன்றிணைப்பு

வரையறுக்கப்பட்ட ஸ்கை டெலிவிஷன் மற்றும் ரேடியோ நெட்வேர்க்ஸ் (தனியார்) நிறுவனம் மற்றும் டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் ஒன்றிணைப்பு பூர்த்தியாக்கப் பட்டுள்ளதுடன், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2013, யூலை 1 ஆந் திகதி கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒன்றிணைப்புச் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளதெனவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது :-

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ் (தனியார்) நிறுவனம்
ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு விலாசம் : இல. 475, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
ஒன்றிணைக்கப்பட்ட திகதி : 2013, யூலை 1 ஆந் திகதி
ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 261

டயலொக் புரோட்பேண்ட் நெட்வேர்க்ஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
தவிசாளர்.

2013, யூலை 5.

7-152

---

# ஏல விற்பனைகள்

**மேல் மாகாணம் கொழும்பு (வர்த்தக) உயர் நீதிமன்றத்தில் அதன் சிவில் சட்டதிருத்தத்தை அமுல்படுத்துகின்றது.**

லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ, (முன்னாள் லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டெட்), இல. 100/11/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய (கம்பனி புதிய இல. பீகியூ 70)

.................... வழக்காளி.

வழக்கு இல. :
எச்சீ (சிவில்)
12/09/எம். ஆர் (1)

எதிரே

ஜெயினுல் ஆப்டீன் மொகமட் ரகீம், இல. 19, அட்டம்பொலவத்த வீதி, ஹெந்தளை, வத்தளை

.................... பிரதிவாதி.

2010, செத்தெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட மேற்கூறப்பட்ட வழக்கில் கட்டளையிடப்பட்ட இறுதித் தீர்ப்புக்கமைய, மேற்கூறப்பட்ட பிரதிவாதி வழக்காளிக்கு ஐம்பத்தேழு இலட்சத்து எழுபத்தையாயிரத்து எண்ணூற்றேழு ரூபா (ரூ. 57,75,807) அத்துடன் 2008.07.08 ஆந் திகதி தொடக்கம் இறுதித் தீர்ப்புத் திகதிவரை ஒரு மாதத்திற்கு வட்டி 4% தீர்ப்பில் மேற்கூறப்பட்ட மொத்தத் தொகையான ஐம்பத்தாறு இலட்சத்து முப்பத்துநான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்றேழு ரூபா (ரூ. 56,34,397) மேலதிக சட்ட ரீதியான வட்டிச் செலவுகளுடன் முழுமையாக மேற்கூறப்பட்ட பிரதிவாதி தீர்க்கவேண்டியுள்ளது என தீர்ப்பில் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இங்கு அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் எல்லைக்குட்பட்ட வளவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட தீர்ப்பின்கீழ் மீளப்பெறவேண்டிய மேற்கூறப்பட்ட பண நிலுவை, வருமானம், வாடகை, இலாபம் போன்ற ஏனைய வருமானங்கள் பெறுவதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது எனவும் மேற்கூறப்பட்ட பணம், வட்டி மற்றும் செலவுகளை வழக்காளிக்கு நிறைவேற்றத்தவறின் பிரதிவாதியிடமிருந்து பறிமுதல் செய்வதற்கு மேற்கூறப்பட்ட நீதிமன்ற அலுவலகரால் அதை மதிப்பீடு செய்து நிறைவேற்றுவதற்கு தீர்ப்பில் மேலும் கட்டளை பிறப்பிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பிரதிவாதிக்கு உரிய தீர்ப்புகளை நிறைவேற்றத் தவறியதால் அதே சமயம் நான் இதன் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அறிவிக்கிறேன்.

மேற்கூறப்பட்டவை தொடர்பான அட்வணை 2013, யூலை 26 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்துள்ளேன்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், சியனகோரள அதிகாரி பத்துவ ஹுனுபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கஹடகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரவிக்கிரம என்பவரால் தயாரிக்கப்பட்டு 13.05.1995 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 159/1995 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 1ஏ/2 என அடையாளமிடப்பட்ட காணி பிரித்து அறியப்பட்டுள்ள

சகல காணித்துண்டுகளும் அங்கு காணப்படுகின்ற காணியின் எல்லையாக- வடக்கில் : சொத்தைக் கொண்டவரான மெராயா பீரிஸ் ; கிழக்கில் : காணித்துண்டு 1ஏ/3 பகுதியும் ; தெற்கில் : டிபிட்டிகொட வீதியும் ; மேற்கில் : 1ஏ/1 பகுதியும் அமைந்துள்ள காணி பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவக அலுவலகத்தில் பரிமாணம்/பக்கம் சீ508/227 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணி அண்மையில் மீளளவு செய்யப்பட்டதன் விபரம் கீழ்வருமாறு :

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியன கோரள அதிகாரிபத்துவ, ஹுனுபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கஹடகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரவிக்கிரம என்பவரால் தயாரிக்கப்பட்டு 10.02.2007 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 31/2007 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு எக்ஸ் என அடையாளமிடப்பட்ட காணி பிரித்து அறியப்பட்டுள்ள சகல காணித்துண்டுகளும் அங்கு காணப்படுகின்ற காணியின் எல்லையாக- வடக்கில் : சொத்தைக் கொண்டவரான மெராயா பீரிஸ் ; கிழக்கில் : நிலவரைபட இல. 159/1995 இல் துண்டு 1ஏ/3 பகுதியும் ; தெற்கில் : டிபிட்டிகொட வீதியும் (வீதி ஜெயந்தி மஹால் சந்தியிலிருந்து டிபிட்டிகொட வரை) ; மேற்கில் : நிலவரைபட இல. 159/1995 இல் 1ஏ/1 பகுதியும் அமைந்துள்ள காணி பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- யப்பான் நட்புறவு பாலத்தினூடாக நீர்கொழும்பு வீதி மார்க்கமாக சுமார் 2 கி. மீ. பயணம்செய்து பொதுச்சந்தை சந்திவரை செல்க. பின் வலது பக்கத்திலுள்ள அவரிவத்த வீதியால் திரும்பி செல்க. பின் சுமார் 1.3 கி. மீ. வரை சென்றால் வலதுபக்கத்தில் உள்ள தலுபிட்டிய வீதி மார்க்கமாக சுமார் 500 மீற்றர் சென்று ஜெயந்தி மஹால் சந்தியை அடையவும். அங்கிருந்து டிபிட்டிகொட வீதியால் சுமார் 150 மீற்றர் வரை சென்றால் வலது பக்கத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும். இதன் வரிமதிப்பீட்டு இலக்கம் 572.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் மீளளிக்கப்படாத 25% ;
(2) உள்ளூர் அதிகார வரி 1% ;
(3) ஏலவிற்பனை விளம்பரச் செலவீனம் மற்றும் பிரயாணக் கட்டணங்கள் ;
(4) மதிப்பீட்டாளரின் கட்டணம் ரூபா 13,950 ;
(5) விற்பனை நிபந்தனைகளை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 3,000 ;
(6) இலிகிதர் மற்றும் ஏலதாரர் கட்டணங்கள் ரூபா 2,500 ;
(7) விற்பனை விலை ரூ. 7,500 இற்கு மேல் இருந்தால் ரூ. 150 அறவிடப்படும். ஒவ்வொரு ரூ. 1,000 வுக்கும் ரூ. 5 ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் ;
(8) கொள்வனவு விலையின் மிகுதி 75% கடனாக இருப்பின் 30 நாட்களுக்குள் வர்த்தக உயர் நீதிமன்றத்தில் செலுத்தல் வேண்டும். பின்னர் இரு சாட்சிகள் முன்னிலையில் ஒரே நேரத்தில் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''ராஜகிரிய, இல. 100/1, 1/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையில் 'லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ, உதவி முகாமையாளர் (சட்டம்)'' இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இல. : 588088, 5880880.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 011-3068185, 2572940.

7-144

---

**செலான் வங்கி பீஎல்சீ – மாத்தறை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

('கடன்பட்டோர்' என்ற வகையில் இல. 16, பள்ளிமுல்ல, மாத்தறையைச் சேர்ந்த மகேந்திர தேவனாராயன என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

**சொத்து ஏல விற்பனை**

**தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறையின் நான்கு எல்லைப் பகுதிக்குட்பட்டதும் மற்றும் நகர சபை எல்லைக்குட் பட்டதுமான வரிமதிப்பீட்டு இல. 120, பழைய தங்கல்ல வீதி, கொட்டுவேகொடவில் ஒரு பெறுமதிவாய்ந்த வணிக சொத்து ஒன்று தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 1.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

மேலே குறிப்பிட்ட சொத்தை 2013, யூலை 30 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- மாத்தறை-நில்வளவ கங்கை பாலத்திலிருந்து பழைய தங்கல்ல வீதி மார்க்கமாக 250 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வரிமதிப்பீட்டு இல. 120, பழைய தங்கல்ல வீதியில் உள்ளது. இது வீதியின் வலதுகைப்பக்கமாக அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 06.08.2010 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 30.07.2010 ஆந் திகதிய ''லங்காதீப'', ''டெயிலி மிரர்'' ஆகிய பத்திரிகைகளிலும் 05.08.2010 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர்

அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி, (3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456476, 2456480.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 011-3068185, 2572940.

7-143

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1007 5076 1180 - என். தியாகராஜா மற்றும் பீ. சீ. கே. சரணபால

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2007.04.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2008.08.08 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2008.07.28 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு இலட்சத்து தொண்ணூற்றுமூவாயிரம் ரூபா (ரூ. 4,93,000) 2006, செத்தெம்பர் 01 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும்வரை நான்கு இலட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா (ரூ. 4,85,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2013 ஆம் ஆண்டு யூலை 25 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த ஹேவாஹெட்ட கந்தாஹாய கோரலே பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹூபுத்தலே பல்லேகம கிராமத்தில் அமைந்த "பொருமுல்லெபிட்டிய ஹேன" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, மார்ச்சு 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 348/03/2005 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : பத்தன்வல தோட்டம் ; கிழக்கிற்கு : ரட்டேமுல்ல தொடக்கம் தலஓய வரையான வீதி ; தெற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டபிள்யூ. எம். வீரகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட இல. 11717 எனும் வரைபடத்தின் லொட் 1 ; தென்மேற்கு மற்றும் மேற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஆர். டபிள்யூ. எம். வீரகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 5656 இன் லொட் 7 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 420/103 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-157/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0025 5001 6551 - எச். எம். எஸ். கே. எஸ். பண்டார

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2002.03.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2003.05.09 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2006.08.25 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூ. 4,80,000) கட்டணமும் விளம்பரச்

செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யு. ஜயசூரிய மூலமாக 2013 ஆம் ஆண்டு யூலை 25 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், தெற்கு மாத்தளை, அஸ்கிரிபல்லேசியபத்துவின் தம்பரவவில் அமைந்த பல்லேவலவ்வே தென்ன என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ரன்சாகொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 1985,பெப்புருவரி 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 795 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட இல. 795 எனும் வரைபடத்தின் லொட் 2 ; கிழக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 3பி ; தெற்கிற்கு : தெவட்ட ; மற்றும் மேற்கிற்கு : மார்ட்டின் உன்னேஹேஇற்கு சொந்தமான காணி தற்போது தன்கொன் எஸ்ட்டேட் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்திரண்டு தசம் ஐந்து ஆறு பேர்ச் (0ஏ. 2றூ. 32.56பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் மாத்தளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 483/25 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-157/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1025 5008 8719 - யூ. ஜீ. சமந்த மற்றும் ஏ. ஜீ. ஆர். பீ. குலதுங்க

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009, மார்ச் 13 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.03 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.08.28 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு இலட்சத்து அறுபத்துநான்காயிரத்து இருநூற்றாறு ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 6,64,206.22) 2009, சனவரி 07 ஆந் திகதி முதல் இல. 36865 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை ஐந்து இலட்சத்து எழுபத்தேழாயிரத்து தொளாயிரத்தெண்பத்துநான்கு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 5,77,984.21) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட இல. 36865 இன் ஈட்டுமுறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யு. ஜயசூரிய மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக 2013 ஆம் ஆண்டு யூலை 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு, கோஹோன்சியாபத்துவின் தென்ன இல் அமைந்த துனுமடலகஹா முல்ல என அழைக்கப்படும் காணிக்கு மாத்தளை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யூ. எச். பீ. கே. எம். ரீ. அன்கம்பன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, யூலை 30 ஆந் திகதியிடப்பட்ட 2003, ஓகத்து 30 ஆந் திகதி பிரிக்கப்பட்ட இல. 1175 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 09 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு மற்றும் கிழக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 13 ஐ அடையும் 15 அடி அகல வீதி ; தெற்கிற்கு : லொட் 8 ; மற்றும் மேற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 14. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அதற்குள் அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட குறிப்பிட்டவாறு பயிர்களுடன் குறிப்பிடப்பட்ட வீதிகளை உபயோகிக்கக்கூடிய உரிமைகளுடன் மாத்தளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 562/131 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-157/3

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், “பொரல்லை” என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்றீம் கோட்’ புறொக்ராால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2013 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2013 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2013 |
| | | வியாழன் | 08.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2013 |
| | | வெள்ளி | 16.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2013 |
| | | வெள்ளி | 23.08.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 08.08.2013 |
| | | வெள்ளி | 30.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2013 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2013 |
| | | வெள்ளி | 13.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2013 |
| | | வெள்ளி | 20.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2013 |
| | | வெள்ளி | 27.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.